அலகு 8

# மின்னணு தகவல் பரிமாற்ற முறையில் (Electronic Data Processing – EDP) தணிக்கை மேற்கொள்ளுதல்

## கற்றலின் நோக்கங்கள்:

- இந்த பாடத்தை படித்தப்பின், மாணவர்கள் மின்னனு தகவல் பரிமாற்ற முறையில் தணிக்கை என்பதன் பொருள், தன்மைகள், அணுகுமுறைகள், நன்மைகள் மற்றும் அதன் குறைபாடுகள் அறிய முடியும்
- கணக்காளரால் தயாரிக்கப்படும் கணக்கியல் முறைக்கும் கணினி மயமாக்கப்பட்ட கணக்கியல் முறைக்கும் உள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்ளுதல்

## நினைவு கூறல்

RECAP

சென்ற பாடத்தில் மாணவர்கள் வியாபார நடவடிக்கைகளின் பொருள் அறிந்து கொண்டனர். மேலும் கடன் கொள்முதல், கடன் விற்பனை, 'விற்பனை அல்லது திருப்ப அடிப்படையில் விற்பனை' ஆகியவற்றுக்கான சான்றாய்வில் தணிக்கையரின் கடமைகள் குறித்து பார்த்தோம்.



## 8.1 பொருள் :

மின்னனு தகவல் பரிமாற்ற முறையில் (EDP) தணிக்கை மேற்கொள்ளுதல் அல்லது தகவல் அமைப்புகள் (Information System) வாயிலாக தணிக்கை மேற்கொள்ளுதல் என்பது கணக்கியல் தகவல்களை கணினி வாயிலாக ஆய்வு செய்தல் மற்றும் சரிபார்ப்பை குறிக்கிறது.

EDP தணிக்கை முறையில், கணக்கியல் தரவுகளை கணினியில் மின்னனு செயல்பாடுகள் சூழ்நிலையில் வடிவமைக்கப்படுகிறது. நிர்வாகங்கள் இப்போது கணக்கியல் அமைப்பில் புதிய மின்னனு சாதனங்களை நிறுவுகின்றன. இது புதிய வாய்ப்புகளை உருவாக்கும் மற்றும் செலவுகளைக் குறைக்கும்.

புதிய இயந்திர மயமாக்கப்பட்ட சாதனங்களின் வாயிலாக வியாபார நடவடிக்கைகளை பதிவு செய்யும் பணி மற்றும் கணக்குகளை தயாரிக்கும் பணியை அதிவிரைவாக செய்ய முடியும். மேலும்



Chapter_8.indd 106 4/28/2022 12:03:34 PM

கணக்கு பிழைகளையும், எழுத்தர் பிழைகளையும் வெகுவாக குறைக்க முடியும். இயந்திர மயமாக்கப்பட்ட கணக்குப் பதிவுகள் முறையில் புள்ளியியல் சார்ந்த தகவல்கள் பெற உதவியாக உள்ளது. முடிவுகள் எடுப்பதில் நிர்வாகத்திற்கு இது மிகவும் உதவியாக உள்ளது. அடிப்படை தகவல்கள் கணினியில் கொடுக்கப்பட்டு அதை வெவ்வெறு வழிகளில் வரிசைப்படுத்தலாம். பல்வகையான கணக்கியல் தொகுப்புகள் (Packages) மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மேலும், தேவைப்படும் போதெல்லாம் செயலாக்கப்படும் கணக்கியல் அமைப்பில் கணினியின் பயன்பாடு நிர்வாகத்தின் செயல்பாட்டை மேம்படுத்துகிறது.

## 8.2 EDP தணிக்கையின் பண்புகள் அல்லது இயல்புகள் :

### 1. எளிமையான மற்றும் ஒருங்கிணைந்த பணி:

கணினி மயமாக்கப்பட்ட தணிக்கை என்பது கொள்முதல், விற்பனை, நிதி, சரக்கு, ஊதியம் போன்ற அனைத்து வணிக நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே கணினி மயமாக்கப்பட்ட சூழலில் கணக்குகள் மற்றும் பதிவுகள் தணிக்கையாளரால் சரிபார்ப்பது நிறைவாகவும், எளிமையாகவும் உள்ளது.

### 2. நடவடிக்கைகளின் துல்லியத் தன்மை :

கணினி மயமாக்கப்பட்ட வார்ப்புகள் வியாபார நடவடிக்கைகளின் துல்லியத்தை உறுதிப்படுத்துகிறது. அனைத்து ஆவணங்களையும், பதிவேடுகளையும துல்லியமாக தயாரிக்க முடியும்.

### 3. உடனடி பதிவேடுகள் :

இந்த கணினி மயமாக்கப்பட்ட சூழலில், ஒரு தணிக்கையாளர் அறிக்கைகள், தொகுப்புகள், மற்றும் நிதிசார்ந்த விபரங்களை பல முறைகளில் பெறமுடியும். எனவே, மனநிறைவுடன் பணி மேற்கொள்ள முடிகிறது.

### 4. அதிக நடவடிக்கைகளை கையாளுதல் :

கணினி மயமாக்கப்பட்ட சூழலில் தணிக்கையாளர் வணிக அமைப்பின் மிகப்பெரிய அளவிளான நடவடிக்கைகளை கையாளும் திறமையை பெறுகிறார்.

### 5. விரைவாக முடிவெடுத்தல் :

நிகழ் நேரத் தரவுகள் மற்றும் மேலாண்மை தகவல் அறிக்கைகளின் தொகுப்பு ஆகியவை தணிக்கையாளரை விரைவான முடிவெடுத்தலை உறுதியாக்குகிறது.

## 8.3 கணக்காளரால் எழுதப்படும் கணக்கியல் முறை – கணினி மயமாக்கப்பட்ட கணக்கியல் முறை – வேறுபாடுகள்

| வ. எண் | வேறுபாட்டின் அடிப்படை | கணக்காளரால் எழுதப்படும் கணக்கியல் முறை | கணினி மயமாக்கப்பட்ட கணக்கியல் முறை |
|---|---|---|---|
| 1 | பொருள் | இந்த முறையில், குறிப்பேடு, பேரேடு ஆகியவை பராமரிக்கப்படுகிறது. | இம்முறையில் கணினி மற்றும் கணக்கியல் மென்பொருள்கள் நடவடிக்கைகளின் டிஜிட்டல் பதிவுக்கு பயன்படுத்தப் படுகின்றன. |
| 2 | கணக்கியல் ஏடுகளை பராமரித்தல் | இம்முறையில் நடவடிக்கைகள் குறிப்பேட்டில் எழுதப்பட்டு பிறகு பேரேடுகளில் நேரடியாக பதியப்படுகிறது. | இம்முறையில் கணக்குப் பதிவேடுகளும், சான்றுகளும், ஆவணங்களும் நேரடியாக பராமரிக்கப்படுவதில்லை. |



Chapter_8.indd 107 4/28/2022 12:03:35 PM

| | | | |
|---|---|---|---|
| 3 | கணக்கியல் அமைப்பு | இம்முறையில், பதிவுகளை கணக்கியல் கொள்கைகளின் அடிப்படையில் குறிப்பேட்டில் எழுதப்பட்டு பேரேட்டில் எடுத்தெழுதப்படுகிறது. | கணினி முறையில் ஒவ்வொரு நடவடிக்கையும் கணக்கியல் மென்பொருளில் பதியப்பட்டவுடன் அதற்குரிய பேரேடுகளில் தானாகவே பதியப்படுகிறது. |
| 4 | கணக்கீடுகள் | இம்முறையில் அனைத்து கணக்கீடுகளும் கணக்காளரால் செய்யப்படுகிறது. | கணினியில், கணக்கியல் கொள்கைகளின் அடிப்படையில் தொடர்புடைய கணக்கு ஏடுகளில் அந்தந்த நடவடிக்கைகளை தானாகவே பதிவு செய்கிறது. ஒரு நடவடிக்கையை உள்ளீடு செய்வது மட்டுமே கணக்காளரால் செய்யப்பட வேண்டும். |
| 5 | தணிக்கை அமைப்பு | இம்முறையில், தணிக்கையாளர் ஒவ்வொரு நடிவடிக்கையையும் உரிய ஆவணங்கள், சான்றுகள் இடாப்புகளுடன் ஒப்பிட்டு சரிபார்க்கிறார். | கணினியால் பதிவு செய்யப்பட்ட கணக்கேடுகளை உரிய சான்றுகளுடன் தணிக்கையாளர் ஒப்பிட்டு ஒரே நேரத்தில் தணிக்கை மேற்கொள்கிறார். |
| 6 | கணக்கு ஏடுகளின் சரிபார்ப்பு | இம்முறையில் கணக்கு ஏடுகளின் உள்ளீடுகள், கணக்கியல் தகவல்கள் வெளிப்படையானவை. மேலும் தணிக்கையாளரால் நேரடியாக பார்வையிட முடியும். | EDP சூழலில் கணக்கியல் உள்ளீடுகள் மற்றும் பதிவுகளை அச்சு நகல் எடுத்து தணிக்கையாளர் பார்வையிட முடியும். |

## 8.4 EDP தணிக்கையின் அணுகுமுறைகள் :

### 1. கணினி சார்ந்த தணிக்கை:

*இது பாரம்பரிய முறையில் செய்யப்படும் தணிக்கை வகையாகும். தணிக்கையாளர் உள்ளீட்டு தரவுகளை முறைப்படுத்தி, கணினியின் செயலாக்கத்தை கருத்தில் கொள்ளாமல் கணினியால் உருவாக்கப்பட்ட வெளியீட்டு தரவுகளின் சரித்தன்மையை பார்ப்பார். இந்த அணுகுமுறை பொதுவாக, 'கணினி சார்ந்த தணிக்கை' என்று கூறப்படுகிறது. இந்த முறையானது முதன்மையாக மூல ஆவணங்கள் சரியாக உள்ளது என்பதை உறுதி செய்கிறது. வெளியீட்டு தரவுகள் அல்லது முடிவுகள் மூல ஆவணங்களுடன் ஒப்பிட்டு தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது.*



Chapter_8.indd 108 4/28/2022 12:03:35 PM

**கணினியை சார்ந்த தணிக்கை**




### 2. கணினியுடன் இணைந்த தணிக்கை :

தற்போதைய கணினி மயமாக்கப்பட்ட சூழலில், தேய்மானம் கணக்கிடுதல், வளர்ச்சி விகிதம், சதவீதங்கள், கடிதங்கள் வரைதல் போன்றவற்றிற்கு உரிய மென்பொருள்களை தணிக்கையாளர் பயன்படுத்துகிறார், எனவே, ஒரு துணைக் கருவியாக பயன்படுத்தப்படுகிறது.

**2022 சிறிய நிறுவனகளுக்கான 31 சிறந்த கணக்கியல் மென்பொருள்களின் பட்டியல்**

Here's the list of top 30 accounting software for small business to ensure smooth and efficient accounting transactions.

Tally.ERP 9, Ezy Rokad, Profitbooks, PEASx GST Inventory & Accounting Software, Busy Accounting Software, Marg Accounting Software, Saral Accounting Software, Zoho Books, MProfit, Quickbooks, Wave Accounting, Zoho Expense, FreshBooks, NetSuite ERP, FreeAgent,

Vyapar, HDPOS Smart Accounts & Billing, Xero, Giddh Accounting Software, Reach Accountant, Book Keeper, SlickAccount, Reeleezee for Accounting, myBooks, Logic ERP, Horizon ERP, Billing 360 Accounting Software, CraveInvoice, AlignBooks, Fraxinus Books, ZipBooks Computer Accounting System.



### 3. கணினி மூலம் தணிக்கை செய்தல் :

கணிப்பொறி தகவல்களை உள்வாங்கும் நேரத்திற்கும் அதனை கையாளும் நேரத்திற்கும் இடைவெளி உள்ளதால் கணினி மயமாக்கப்பட்ட சூழல்கள் மற்றும் ஆதார ஆவணங்கள், காகிதங்களின் மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாடு காரணமாக, மேற்கொள்ளப்படும் தணிக்கை "கணினி மூலம் தணிக்கை" எனப்படும். இந்த EDP சூழலில், ஒரு தணிக்கையாளர் நிர்வாகத்தின் அகக்கட்டுப்பாடு முறை, தன்மை மற்றும் தணிக்கையின் கால அளவு உறுதி செய்கிறார். தணிக்கையாளர் கணினி மூலம் முடிவுகளின் நம்பகத் தன்மை மற்றும் துல்லியத் தன்மையை சரிபார்த்து பகுப்பாய்வு செய்கிறார்.



கணினி மூலம் தணிக்கை செய்வதில் தணிக்கையாளர் பின்வருவனவற்றை உறுதி செய்ய வேண்டும்.

கணினி சூழலில் நிகழ் நேரம்‘ (Real Time) என்றால் என்ன?
ஒரு கணினி அமைப்பு தகவல்களைப் பெறுவதற்கும் கையாள்வதற்கும் இடையே உள்ள மிகக் குறுகிய நேரமே கணினி சூழலில் ‘நிகழ் நேரம்‘ ஆகும்.

- மென்பொருளின் தாக்கம் மற்றும் தொடர்ச்சியை சரிபார்த்தல்.
- கணினியால் உருவாக்கப்பட்ட வெளியீட்டை சரிபார்த்தல்.
- ஒரு நடவடிக்கையை தொடங்குதல், செயல்படுத்துதல் மற்றும் பதிவு செய்வதை சரிபார்த்தல்.
- மென்பொருளில் இணைக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை சரிபார்த்தல்.

## 8.5 EDP தணிக்கை முறையில் தணிக்கையாளரின் கடமை :

EDP சூழலில் தணிக்கை மேற்கொள்ளும்போது, தணிக்கையாளர் பின்வருவனவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**1. பிழைகளுக்கும், மோசடிகளுக்கும் வாய்ப்பு :**

EDP சூழலில் செயலாக்கம் மிகவும் பரவலாக்கப்படுகிறது. பிழைகளும், மோசடிகளும் நடப்பதற்கு வாய்ப்புகள் உள்ளதை தணிக்கையாளர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**2. மென்பொருள் பற்றிய அறிவு :**

தணிக்கையாளருக்கு மென்பொருள் பற்றிய அறிவு (Computer Aided Software Engineering and Data Base Management System (DBMS) இருக்க வேண்டும்.

**3. தணிக்கை சான்றுகளின் குறைப்பு :**

மின்னணு தகவல் பரிமாற்றங்கள் (EDP) காரணமாக, கிளைகளுக்குள் நெட்வொர்க்கிங் இணைப்பு உள்ளதால், தாளில் எழுதும் பணி குறைகிறது. இதனால் தணிக்கைக்கு சான்றுகள் வழங்குவது குறைந்துள்ளது.

**4. தணிக்கை நுட்பங்கள் :**

ஒரு (EDP) சூழலில் ஸ்கேனர்கள், குரல் பதிவுக் கருவிகள் போன்ற மின்னணு சாதனங்களை அறிமுகப்படுத்தியதன் காரணமாக, தணிக்கையாளர் தனது தணிக்கை நுட்பங்களையும், ஆதாரங்களை சேகரிக்கும் முறைகளையும் மாற்ற வேண்டும்.

## 8.6 EDP தணிக்கையின் நன்மைகள்:

**1. விரிவான கணக்கேடுகள் கிடைத்தல்:**

கணினி மயமாக்கப்பட்ட கணக்குகளில் விரிவான மற்றும் புதுப்பித்த பதிவுகள் கணக்கியல் நோக்கங்களுக்காக உடனடியாகக் கிடைக்கும். இது நிர்வாகத்தின் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டை மேம்படுத்துகிறது மற்றும் நடவடிக்கைகள் சரிபார்ப்பதில் தணிக்கையாளருக்கு உதவுகிறது.

**2. நேரத்தை மிச்சப்படுத்துகிறது:**

கணினி மயமாக்கப்பட்ட கணக்குகள் நேரத்தையும், உழைப்பின் ஈடுபாட்டையும் அதிக அளவில் சேமிக்கிறது. கணக்குகளை ஆவணப்படுத்துவதிலும், செயலாக்குவதிலும் இது நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்துகிறது.



Chapter_8.indd 110 4/28/2022 12:03:36 PM

### 3. குறைவான சோதனை:

கணக்காளரால் எழுதப்பட்ட கணக்கியல் முறையை ஒப்பிடும் போது, கணினி மயமாக்கப்பட்ட கணக்குகளின் திறன் அதிகமாக உள்ளது. எனவே, கணினி மயமாக்கப்பட்ட கணக்குகளுக்கு சோதனை (அல்லது) ஆய்வு குறைவாக தேவைப்படுகிறது.



### 4. கணக்குகளை ஒப்பிட்டு பார்க்கும் வசதி:

வங்கி இருப்பு, சரக்கிருப்பு, வாடிக்கையாளர் மற்றும் சரக்கு அளித்தோர் கணக்குகளை விரைவாக ஒப்பிட்டு பார்க்க முடியும்.

### 5. நிர்வாகத்திற்கு விரைவான தகவல் அளித்தல்:

கணினி பயன்படுத்துவதால் மேலாண்மைக்கு தேவையான புள்ளி விவரங்கள், கணக்கு அறிக்கைகள் விரைவாக கிடைக்கிறது. இதனால் நிர்வாகத்தினர் விரைவாக முடிவுகளை எடுக்க முடிகிறது.




### 6. தணிக்கை சோதனை:

கணினி மயமாக்கப்பட்ட கணக்கியல் முறை, தணிக்கை சோதனைக்கு பெரிதும் உதவுகிறது. செயல்திறனை தணிக்கை செய்ய, தணிக்கையாளர் பல்வேறு 'சோதனைப் பொதிகளை' (Test Packs) பயன்படுத்தலாம்.

### 7. எழுதுபொருள் செலவினம் குறைத்தல்:

மின்னணு தரவு பரிமாற்றம் மற்றும் கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் அமைப்புகளின் பயன்பாடு ஆகியவை காகிதம் மற்றும் எழுது பொருள் செலவுகளை குறைக்கிறது.

### 8. பிழைகள் மற்றும் மோசடிகளை குறைத்தல்:

ஸ்கேனர்கள், குரல் பதிவு கருவிகள் போன்ற மின்னணு சாதனங்களை பயன்படுத்துவதால், கணினி மயமாக்கப்பட்டட சூழலில் பிழைகள் மற்றும் மோசடிகள் குறைகின்றன.

## 8.7 EDP தணிக்கையின் குறைபாடுகள்:

### 1. முறையான அங்கீகாரம் இல்லை:

கணினி மயமாக்கப்பட்டட சூழலில், வழக்கமான வடிவத்தில் முறையான அங்கீகாரம் இல்லாமல் பரிவர்த்தனைகள் கணினியில் வழங்கப்படுகின்றன. இது என்ன, எப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை சரிபார்ப்பதில் சந்தேகம் மற்றும் சிரமங்களை உருவாக்குகிறது.

### 2. சேமிப்பு சாதனங்கள் இழப்பு:

கணக்கியல் தரவுகளும், நிரல்களும் வன் வட்டு போன்ற சேமிப்பு சாதனங்களில் சேமிக்கப்படுகிறது. மேற்காண் சாதனங்கள் தொலைந்து போவதற்கும் கணினி நுண்கிருமியால் பழுது ஆவதற்கும் வாய்ப்புகள் உண்டு.



Chapter_8.indd 111 4/28/2022 12:03:36 PM

### 3. கணினி நுண்கிருமி :

கணினி நுண்கிருமி என்பது கணினியின் இலக்கு பகுதியின் செயல்பாட்டை பாதிக்கிறது. இது பல வழிகளில் கணினியில் உட்படுத்தப்படுகிறது. கணினி வைரஸ் நிரலை மெதுவாக்கலாம் அல்லது கணினியை செயலிழக்கச் செய்யலாம்.

### 4. கணினி வழி மோசடிகள் :

கணினி மயமாக்கப்பட்ட சூழலில் கணினியின் கணக்குகளை மாற்றுதல் அல்லது திருடுதல் போன்ற அங்கீகரிக்கப்படாத பயன்பாடு காரணமாக தகவலின் துல்லியம் மற்றும் நம்பக தன்மையை உறுதி செய்வது கடினம்.

### 5. நேரடியாக சரிபார்க்க இயலாது.

கணினி மயமாக்கப்படட கணக்கியல் அமைப்பில் தணிக்கையாளருக்கு உள்ளீடுகள், புத்தகங்கள் போன்றவற்றை அச்சுப்பதிப்பாக எடுக்கும் வரையில் நேரடியாக சரிபாக்க இயலாது.




## பாடச் சுருக்கம்

EDP தணிக்கை என்பது கணினி மயமாக்கப்பட்ட சூழலில் மின்னனு தகவல் பரிமாற்ற முறையில் தணிக்கை செய்வது.

**கணினியை சார்ந்த தணிக்கை :**

பயன்பாட்டு முறை மற்றும் செயலாக்கம் நேரடியாக ஆய்வு செய்யப்படாததால், தணிக்கையாளர் கணினியை ஒரு கருப்பு பெட்டியாகப் பார்க்கிறார்.

**கணினி மூலம் தணிக்கை :**

இந்த அணுகு முறையில், தணிக்கையாளர் கணினி மற்றும் தரவை செயலாக்கப் பயன்படுத்தப்படும் மென்பொருளை ஆராய்கிறார். இது வெள்ளைப் பெட்டி அணுகுமுறை என்றும் அழைக்கப்படுகிறது.

**ஆடிட் ட்ரையல்:**

ஆடிட் ட்ரையல் என்பது தணிக்கை ஆரம்பம் முதல் இறுதிவரை நடவடிக்கைகளையும் பதிவுகளையும் வரிசைப் படுத்துவதாகும்.

## கலைச் சொற்கள்

- EDP – Electronic Data Processing – தகவல் பரிமாற்ற முறை
- (Real Time): ஒரு கணினி அமைப்பு தகவல்களைப் பெறுவதற்கும் கையாள்வதற்கும் இடையே உள்ள மிகக் குறுகிய நேரம்
- Computer Aided Software Engineering and Data Base Management System (DBMS) – தணிக்கையாளருக்கு தேவைப்படும் மென்பொருள் பற்றிய அறிவு
- Test Packs – சோதனைப் பொதிகள்

## மதீப்பீடு :

### I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக

1. கணக்கியல் செயலாக்கம் பயன்படுத்தப்படும் அமைப்புகளின் ஆய்வு மற்றும் சரிபார்ப்பு _________
   அ. தணிக்கை
   ஆ. அகத்தணிக்கை
   இ. சட்டமுறை தணிக்கை
   ஈ. EDP தணிக்கை (அ) கணினி மயமாக்கப்பட்ட தணிக்கை

2. எந்த அணுகுமுறை கணினியை கணக்குகள் பராமரிக்கும் சாதனமாகப் பயன்படுத்துகிறது?
   அ. கணினியுடன் இணைந்த தணிக்கை
   ஆ. கணினி மூலம் தணிக்கை
   இ. கணினி சார்ந்த தணிக்கை
   ஈ. இவையனைத்தும்.

3. தணிக்கை மென்பொருள் ________ அணுகுமுறையில் துணை சாதனமாக பல்வேறு கணக்கீடுகள் செய்ய பயன்படுத்தப்படுகிறது.
   அ. கணினி உதவியுடன் தணிக்கை
   ஆ. கணினி மூலம் தணிக்கை
   இ. கணினி சார்ந்த
   ஈ. கணினி மயமாக்கப்பட்ட தணிக்கை

4. கணினி மயமாக்கப்பட்ட சூழலில் தொடக்கத்திலிருந்து இறுதிவரை தரவுகளை கண்காணிப்பது ______________.
   அ. தணிக்கை சோதனை
   ஆ. சோதனை
   இ. நடவடிக்கைளின் கட்டுப்பாடு
   ஈ. இவற்றில் எதுவுமில்லை

5. நடவடிக்கைகளின் செயல் திறனை ஆய்வு செய்வதற்காக மொத்த தரவுகளிலிருந்து எடுக்கப்பட்ட தரவு __________ என அழைக்கப்படுகிறது.
   அ. உள்ளீடு தரவு
   ஆ. வெளியீடு தரவு
   இ. சோதனை தரவு
   ஈ. தரவுக் கட்டுப்பாடு

விடைகள்: 1. (ஈ), 2. (இ), 3.(அ),
4. (அ), 5. (இ)



Chapter_8.indd 113 4/28/2022 12:03:37 PM

## II. குறு வினாக்கள்

1. EDP தணிக்கை என்றால் என்ன?
2. தணிக்கை சோதனை என்றால் என்ன?
3. EDP தணிக்கையின் அணுகுமுறைகள் யாவை?

## III. சிறு வினாக்கள்

1. கணக்காளரால் எழுதப்படும் கணக்கியல் முறை, கணினி மயமாக்கப்பட்ட கணக்கியல் முறை வேறுபடுத்துக.
2. கணினி மூலம் மேற்கொள்ளப்படும் தணிக்கை பற்றி சிறு குறிப்பு வரைக.
3. கணினி உதவியுடன் மேற்கொள்ளப்படும் தணிக்கை முறை பற்றி எழுதுக.
4. கணினி மயமாக்கப்பட்ட சூழ்நிலையில், ஒரு தணிக்கையாளரின் கடமைகள் யாவை?
5. EDP தணிக்கையின் ஏதேனும் இரு நன்மைகள் எழுதுக.

## IV. கட்டுரை வினாக்கள்

1. EDP தணிக்கையின் சிறப்பியல்புகள் – விவரி.
2. கனிணி மயமாக்கப்பட்ட தணிக்கை முறையில் ஒரு தணிக்கையாளரின் கடமைகளை விளக்குக.
3. கணக்காளரால் எழுதப்படும் கணக்கியல் முறைக்கும், கணினி மயமாக்கப்பட்ட கணக்கியல் முறைக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.
4. EDP தணிக்கையின் நன்மைகளும், குறைபாடுகளும் யாவை?
5. EDP தணிக்கை முறை பற்றி விவரி.

## REFERENCES


1. Practical Auditing - Dr.G.Anitha & Dr.J.Sankari, Sai Selva Publisher Distributors
2. Practical Auditing - Dr.K.Sundar & K.Paari, Vijay Nichole Imprint Pvt Ltd.
3. Computer Applications in Business - Dr.P.Rizwan Ahmed, Margham Publications.